# *திருத்தம்*

# மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
# வடக்கு மாகாணம்

## வடக்கு மாகாண சபையின் விவசாய அமைச்சின் கீழ்வரும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2018

தினக்குரல் பத்திரிகையில் **25.06.2018**ம் திகதியில் பிரசுரிக்கப்பட்டதும் வடக்கு மாகாண இணையத்தளத்தில் வெளியிடப்பட்டதுமான மேற்படி ஆட்சேர்ப்புப் பரீட்சைக்கான விளம்பரத்தின் **பந்தி 05.4 (அ)** இல் கூறப்பட்ட விடயங்களுக்கு பதிலாக பின்வரும் பந்திகள் பிரதியீடு செய்யப்படுகின்றது.

**05.4 நீர்வாழ் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III பதவிக்கானது :-**

**(பதவி இல – 04)**

**அ) கல்வித் தகைமைகள் :-**

க.பொ.த (சா/த) பரீட்சையில் **ஒரே அமர்வில்** மொழி (தமிழ் / சிங்களம் / ஆங்கிலம்), கணிதம் ஆகிய பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

**க.பொ.த (உ/த) பரீட்சையில் ஏதேனுமொரு துறையில் ஆகக்குறைந்தது ஒரு பாடம் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (பொதுப் பரீட்சை மற்றும் ஆங்கிலம் நீங்கலாக)**

இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்கான **விண்ணப்ப முடிவுத்திகதியானது 31.08.2018ம்** திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளதுடன் தகைமைகள்யாவும் இவ்விண்ணப்ப முடிவுத்திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் மேற்படி கல்வித் தகைமைகளுடன் **25.06.2018**ம் திகதிய பரீட்சை விளம்பரத்தின் **பந்தி 05.4 (ஆ)** கூறப்பட்டுள்ள தொழில்சார் தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மட்டும் இவ்விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னராக விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

ஏற்கனவே **25.06.2018**ம் திகதிய தினக்குரல் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் ஏனைய விடயங்கள் மாற்றமின்றிக் காணப்படும் என்பதுடன் அவ்விளம்பரத்திற்கு அமைவாக **மேற்குறித்த கல்வித் தகைமைகளுடன் 25.06.2018ம் திகதிய பரீட்சை விளம்பரத்தின் பந்தி 05.4 (ஆ) கூறப்பட்டுள்ள தொழில்சார் தகைமைகளையும் அடிப்படையாகக் கொண்டு ஏற்கனவே விண்ணப்பித்துள்ளவர்கள் மீண்டும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கவேண்டிய தேவைப்பாடு இல்லை** என அறிவுறுத்தப்படுகின்றார்கள். மேலும் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத அல்லது விளக்கமற்ற விடயங்கள் தொடர்பில் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினாலேயே இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

**அ.சிவபாலசுந்தரன்.**
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
**17.08.2018**